2014 டிசம்பர் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

9. அரசினர் தனித் தீர்மானம்

தேசிய நீதிபதிகள் நியமன ஆணையம் அமைக்க வகை செய்யும் அரசமைப்பு நூற்று இருபத்து ஒன்றாவது திருத்தச் சட்டமுன்வடிவிற்கு ஏற்பளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"That this House ratifies the amendments to the Constitution of India falling within the purview of clause (b) of the proviso to clause (2) of Article 368, proposed to be made by the Constitution (One Hundred and Twenty-first Amendment) Bill, 2014, as passed by both the Houses of Parliament"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, ஏதாவது* Objection *இருந்தால் சொல்லுங்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசால் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தச் சட்டத்தை முதலில் நான் வரவேற்கிறேன். அதே சமயத்தில், ஒரு முக்கியமான விஷயத்தை மட்டும் நான் சொல்லி,*

அமர்கிறேன். ஏற்கெனவே இருக்கிற Collegium என்ற அமைப்பிற்கு மாறாக இப்பொழுது National Judicial Appointments Commission நியமிக்கப்படுகிறது. High Court நீதிபதிகள், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்திற்கு, இதில் முக்கியமான என்னுடைய வேண்டுகோள் என்னவென்று சொன்னால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், சமூக நீதிக்குப் பெயர் பெற்ற மாநிலம். எனவே, உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் இட ஒதுக்கீடுகள்-தாழ்த்தப்பட்டோர், பெண்கள், சிறுபான்மையினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தையும், மாநில அரசு சார்பாக வற்புறுத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் சாசன சட்டத்தினுடைய இந்த 121-வது திருத்தத்தை மனிதநேய மக்கள் கட்சி எதிர்க்கின்றது. நீதிபதிகள் நியமனத்தில் வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டுமென்ற நோக்கம் நிறைவேறப்பட வேண்டும். அதற்கு இந்தச் சட்டத் திருத்தத்தில் வழிவகுக்கவில்லை. அதுமட்டுமல்லாமல், **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. இல்லை. இதுகுறித்து உங்களுடைய கருத்து என்ன? அதைச் சொல்லுங்கள். நீங்கள் மற்றதையெல்லாம் பேச வேண்டாம்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில், ஒரு Federal set up-கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையிலே இயங்கக்கூடிய அமைப்பில் இந்தத் திருத்தத்தில் மாநில அரசுக்கான கருத்தைச் சொல்லக்கூடிய ஒரு வழிவகை செய்யப்படவில்லை என்ற காரணத்தினால் இதை எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2014 டிசம்பர் 8] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

7. அரசினர் தீர்மானங்கள்—*தொடர்ச்சி*

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-33 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.